# முதன்மை மாவட்ட நீதிமன்றம், சிறப்பு நீதிமன்றம் விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்.

அரசு தரப்பு சாட்சி 11 (LW 15) வாக்குமூலம்

## சிறப்பு வழக்கு எண்.7/2021

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | திரு.நரசிம்மஜோதி | வட்டம் | - | |
| த/பெ | - | தட்சணாமூர்த்தி | சாதி | - | |
| வயது | - | | மதம் | - | |
| கிராமம் | - | | தொழில் | - | |

இன்று 08.04.2025, 1969ம் ஆண்டு மத்திய சட்டம் 44ன் படி திருமதி. ஜெயந்தி Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

(எதிரி ஆஜர். )

### முதல் விசாரணை

நான் தற்போது திருக்கோவிலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 27.10.2020ம் தேதி நான் அனந்தபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்த போது காலை சுமார் 8 மணிக்கு துத்திபட்டு கிராமத்தை சேர்ந்த குப்பன் மனைவி நிர்மலா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று அனந்தபுரம் காவல் நிலைய குற்ற எண்.1696/2020 பிரிவு 174(i) Cr.PC ன் படி வழக்கு பதிவு செய்தேன். பின்பு முதல் தகவல் அறிக்கை வாதி கொடுத்த அசல் புகாரினை இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி அவர்களுக்கும் இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர்அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தும் அதனை தொடர்ந்து வழக்கின் புலன் விசாரணைக்காக வழக்கு கோப்பினை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். என்னிடம் அளிக்கப்பட்ட புகார் அதசாஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் முன்னிலையில் புகாரில்

புகார்தாரர் நிர்மலா அவருடைய இடது பெருவிரல் கைரேகையினை பதிவு செய்தார்கள். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதிலும் மேற்படி நிர்மலா அவர்கள் தனது இடது பெருவிரல் கைரேகையினை பதிவு செய்தார்கள். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் சொல்வது போல அசா.1 நிர்மலா என்னிடம் கைரேகை வைத்து புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நிர்மலா உண்மையில் கைரேகை வைப்பது இல்லை என்றும் அவர் கையொப்பம் செய்து கொடுத்த புகாரை மறைத்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.